# அகத்திணை நூல்கள் கூறும் தலைவியின் வருத்தம்

*முனைவர் அ. இராஜலட்சுமி*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை(சுயநிதிபிரிவு)
கொங்குநாடு கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர்

**ஆய்வுச்சுருக்கம்**
*தலைவன் பொருள் வயிற் பிரிந்த போதும், பரத்தையிற் பிரிந்த போதும் களவு காலத்தில் தலைவன் இரவில் வரும் வழியின் ஏதம் குறித்தும், பொருள் வயிற் பிரிந்த பொழுது அவன் சென்ற வழியின் ஏதம் குறித்தும் வருத்தப்படுகின்றாள். இந்த வருத்தமானது அடிப்படை மனவெழுச்சியின் கண் உள்ள வருத்தத்தில் அமைந்துள்ள தலைவியின் பாடல்களை எடுத்துக்காட்டுவது இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

மலர்: 11

சிறப்பிதழ்: 2

மாதம்: ஜூலை

வருடம்: 2023

P-ISSN: 2321-788X

E-ISSN: 2582-0397

DOI:
https://doi.org/10.34293/sijash.v11iS2i3-July.6458

**Synopsis**
When Thalaivan parted with material belly, when he parted with Bharatha, she was saddened about the path taken by Thalaivan at night during the robbery period, and about the path he took when he parted with material belly. It is the purpose of this article to highlight the songs of Thalaevi where this sadness is rooted in basic emotional upheaval.

**முன்னுரை**

பலவாறு துன்புறுத்தும் தலைவனை எண்ணி வருத்தமடைகிறாள் தலைவி. தலைவனை மறந்தேனும் வாழலாம் என்றால் அவளுடைய மனமானது அதனையும் ஏற்காமல் அவனுடன் பற்று உள்ளதாக இருப்பதை எண்ணியும் தனது அன்பை அவன் புரிந்துக் தொள்ளவில்லை என்றும் வருந்துகின்றாள். பலவாறு வருத்தப்படும் தலைவியின் மனநிலை பல பாடல்களில் காட்டடப்பட்டுள்ளது. வருத்தப்படும் தலைவியின் மனநிலையை எடுத்துக்காட்டவதாக இக்கட்டுரை அமைகின்றது.

**களவுக் காலங்களில்**

**குறுந்தொகைப் பாடலில்**

**மறை அலர் ஆகி மன்றத் தஃதே**[1]

தலைவனுடனான களவு ஊரில் அலராக எழுந்ததே என்றும் அதனால் நான் இறந்துபடுவேன் என்றும் கூறி வருந்தினாள் என்பதைக் காண முடிகின்றது.

தலைவன் வருகைக்குத் தடை ஏற்பட்ட களவுக் காலத்தில் அறத்தோடு நிற்கக்கூறும் போது தான் ஒருத்தி மட்டுமே மெலிந்த தோள்களை உடையேன் ஆயினேன் என்றுவருந்தினாள்.

**ஆர்இருட் கங்குல் அணையொடு பொருந்தி,**
**ஓர் யான் ஆகுவது எவன் கொல்,**
**நீர்வார் கண்ணொடு, நெகிழ்தோ ளேனே?**[2]

"அரிய இருள் செறிந்த இரவில் படுக்கை யிடத்துப் பொருந்திக் கிடந்து, கண்கள் நீர் சொரிய, யான் ஒருத்தியுமே மெலிந்த தோள்களை உடையேன் ஆயினேன். அதற்குக் காரணம் யாதோ? என்று தன்னால் தலைவனைக் காண இயலவில்லையே என்றும், அதற்கு ஊரில் எழுந்த அலரே காரணம்" என்றும் வருந்திக் வருந்தினாள்.

ஊரில் அலர் எழுந்ததனாலும் தலைவனுடன் இருக்கத் தடை ஏற்பட்டதாலும் தலைவி வருந்தினாள்.

### உடன் போக்கில் செல்ல முடியாததால்

பெருங்குன்றூர் கிழார் பாடலில் களவொழுக்கம் விரும்பிய தலைவன், மணந்துக் கொள்ளும் கருத்திலனாய் ஒழுக, அதனை நினைந்து தலைவனுடன் மணந்து வாழ உடன்போக்கில் செல்ல முடியவில்லையே என்று வருந்துகின்றாள்.

**பாம்பு மதன் அழியும் பானாட் கங்குலும்**
**அரிய அல்ல - மன் - இகுளை![3]**

பாம்பு தனது வலிமை அழிந்துபடும் படியான பாதிநாள் இரவிலும், இக்காட்டு வழிகளைக் கடந்து செல்வது நமக்கு அரியன அல்லவாம் அந்தோ அது பெற்றிலமே!" என்று வருத்துகின்றாள்.

தலைவியின் இல்லத்தாரின் அனுமதி பெற்றுத் தலைவன் வரைவு அயரும் கருத்திலனாகவும் உடன்போக்கும் கருத்திலனாகவும் இருக்கின்றதை எண்ணி வருந்தியுள்ளாள்.

### நம்பிக்கை முறிவுபட்ட இடத்தில்

களவில் மணந்து கொள்வேன் என்று அவன் சூள் உரைத்ததற்குச் சாட்சி எதுவும் இல்லையே!

**யாரும் இல்லை; தானே கள்வன்;**
**தான் அது பொய்ப்பின், யான் எவன் செய்கோ?[4]**

அவன் வரைவு பொய்த்துப் போனால் நான் என்ன செய்வேன் என்று தோழியிடம் வருந்தினாள் தலைவி என்ற செய்தி குறுந்தொகையின் இருபத்தைந்தாம் பாடலில் உள்ளது.

தலைவன் விரைந்து மணம் முடிப்பான் என்ற நம்பிக்கை ஒருபுறம் இருந்தாலும் அவன் தம்மை ஏமாற்றிவிட்டால் இந்தக் களவிற்குச் சாட்சி இல்லாததால் தனது வாழ்வு என்னவாகும் என்று வருந்தியுள்ளாள்.

**கற்புக் காலத்தில்**
**ஐங்குற்றுப் பாடல் ஒன்றில்,**
**நல்ல சொல்லி மணந்து, இனி**
**"நீயேன்" என்றது எவன் கொல்? அன்னாய்![5]**

நன்மையான பல சொற்கள் சொல்லி முன்னர் மணந்து கொண்டான். இப்போது நின்னைப் பிரியேன் என்று கூறுவதில் பிரிவான் என்று உள் அர்த்தம் உள்ளதோ? என மனம் வேறுபட்டவளாய் வருந்தியுள்ளாள்.

**நாண் இல மன்ற, எம்கண்ணே**

பிரியும் போது அழுதால் பிரிவைத் தடுத் திருக்கலாம். அப்போது அழாது இப்போது அவரில்லாத வேளையில் அவரை நினைந்து அழுதலால். என் கண்கள் நாணமுற்றது என்று வருத்தத்துடன் கூறியுள்ளாள்.

**......... தோழி! -உண்கண்**
**நீரொடு ஓராங்குத் தணப்ப,**
**உள்ளாது ஆற்றல் வல்லுவோர்க்கே,[7]**

அவன் பிரியவும், அவனை நினையாமல் இருப்பதற்கான ஆற்றலை வன்மையாகப் பெற்றவர்கட்கே அது என்றும் நன்மை உடையது. பிரிவை ஆற்ற வல்லாதிருக்கும் என்போல் இருப்பவர்க்கு, அவர் கேண்மை துயர் தருவதே என்று தலைவி வருந்தினாள்.

**எரிபொத்தி, என் நெஞ்சம் சுடும் ஆயின்,**
**எவன் செய்கோ?[8]**
**பொறை தளர்பு பனி வாரும் கண்**
**ஆயின், எவன் செய்கோ?[9]**

காமத்தீயினைப் பொத்தி மறைத்தாலும் என் நெஞ்சம் சுட்டு வருந்தும்நிலையை எவ்வாறு மறைப்பேன். பொறுமையிழந்து நீர் சொரியும் கண்ணினை உடையவளான நான் என் நிலையை எப்படி மறைப்பேன் என்று தலைவி வருந்தினாள்.

**தூது அவர் விடுதரார் துறப்பார் கொல்?**
**நோதக[10]**

விரைந்து வருவேன் என்று கூறுவதற்குத்தூது கூட அனுப்பவில்லையே நம்மை அறவே மறந்தாரோ? என்று தலைவி வருந்தினாள்.

***நொய்யார் நுவலும் பழிநிற்ப, தம்மொடு***
***போயின்று சொல், என் உயிர்*** [11]

தொய்யிலை நீங்காது கிடந்த தலைவன், அவளை விட்டுத் துறந்தார் என்ற

பழிச்சொல்லைக் கேட்டு வாழாது என் உயிர் எனச் சென்று சொல் என்று தலைவி வருந்தினாள்.

***.......கலங்கி மாரி மலரிற் கண்பனி யுகுமே!*** [12]

என் கண்களிலிருந்து கண்ணீர்த் துளிகள் விழுமாறு தலைவன் என்னைப் பிரிந்தான் எனவும் தலைவி வருந்தினாள்.

***பசலை ஆர்த்த, நம் குவளை அம் கண்ணே*** [13]

தலைவனால் ஏற்பட்ட காம நோயால் என் கண்கள் பசலை பாய்ந்தன. அவன் வரவினால் அன்றி இது தீராது என்றும் தலைவி வருந்தினாள்.

நற்றிணைப் பாடலில் அவன் இருந்து அளி செய்த போது தண் துறையாக இருந்த இடம் இன்று அவனில்லாத காலத்து வெறுக்கத் தக்கதாக உள்ளது என்றும்.

***உலவுத்திரை ஓதம் வெருஉம்***
***உரவுநீர்ச் சேர்ப்பனொடு மணவா ஊங்கே*** [14]
***கானக நாடனொடு, ஆண்டு ஒழிந்தன்றே*** [15]

எனது நலன் அவனோடு சென்று விட்டதே என்று தலைவி வருந்தினாள்.

***இருவேம் ஆகிய உலகத்து,***
***ஒருவேம் ஆகிய புன்மை நாம் உயற்கே.*** [16]

தலைவனைப் பிரிந்து உயிர் வாழ்வதை விட அவன் பிரிந்த போதே உயிர்வீட்டிருந்தல் மேலானது ஆகும் என்று தலைவி வருந்தினாள்.

***சொல்லாது ஏகல் வல்லு வோரே*** [17]

சொன்னால் வருத்தமுறுவேன் என நினைத்து சொல்லாமல் சென்ற அவர் வன்மையுடையவரே! என்று தலைவி வருந்தினாள்.

***அரிய கானம் சென்றோர்க்கு***
***எளிய ஆகிய தடமென் தோளே*** [18]

தலைவருக்காக நான் வருந்தினேன் என்று கூறினால் அது தவறு. என் தோள்கள் மெலியுமாறு பிரிந்த அவரே தவறுடையவர் என்று வருந்தி கூறினாள் தலைவி.

அவர் என் அணித்தே நின்று, அகன்ற அப்பொழுதே அணில்கள் விளையாடியிருக்கும் முற்றத்தையுடையதுமான தனிமைப்பட்ட வீட்டினைப் போலக் கருதிப் பொலி விழந்து வருந்துவேன் என்று வருந்தினாள்.

***........அணில் ஆடு முன்றிற்***
***புலப்பில் போலப் புல்லென்று***
***அலப்பென் - தோழி! - அவர் அகன்ற***
***ஞான்றே*** [19]

பிரிவேன் என்று கூறினால் வருத்தப்படுவேன் என்று கூறாமல் சென்றார். இப்பொழுது அதனால் மிகவும் துன்பம் அடைகின்றேன் எனவும் தலைவி வருந்தினாள்.

***.........என் அல்லல் நெஞ்சம் அலமலக்***
***குறுமே.*** [20]

பிரிய மாட்டோம் என்று கூறி நம்மை ஏற்றவர் இப்போது அந்த அன்பு நீங்கியவராக நம்மைப் பிரிவோம் என்று கூறுதல் அறிவுடைய செயலாகுமா? நாம் மட்டும் பிரிந்து வருந்துவது அறிவற்ற செயலாகுமா? என்றும்,

***மடவம் ஆக, மடந்தை, நாமே!*** [21]

கொடுமை கூறுபவரான பெண்டிர்களின் நா என் காதலர் என்னை விட்டு நீங்கவும் யான் குறைவுற்று நலியவும் என்னை எறிகல் போன்ற சொற்களால் தாக்கி வருத்துகின்றனவே இத்துன்பம் தீரும் பொருட்டாகவேனும் அவர் விரைய வாராரோ என்றும்தலைவி வருந்தினாள்.

***..................... கொடியோர் நாவே,***
***காதலர் அகல, கல்லென் றவ்வே!*** [22]
***ஊர்துயில் கொள்ளும் வேளையிலும் நான் துயிலாமல் தவிக்க என்னைப் பிரிந்து சென்றாரே! என்று***
***அலமரல் அசைவளி அலைப்ப. என்***
***உயவு நோய் அறியாது, துஞ்சும் ஊர்க்கே*** [23]

தலைவி வருந்தினாள்.

***நெய்தல் நிலப் பாடல் ஒன்றில்,***
***அகமடல் சேக்கும் துறைவன்***
***இன் துயில் மார்பில் சென்ற என் நெஞ்சே!*** [24]

"தலைவனும் இனிய துயிலுக்குரிய மார்பின் பொருட்டுச் சென்ற என் நெஞ்சம் அவர் அணி செய்திலர் என்று அங்கே தங்கியிருத்தலை வெறுத்து இங்கு வாராதிருப்பதாக!" என்று தலைவனின் நினைவாக இருந்த நெஞ்சம் அவனிடமே செல்லட்டும் என்று வருந்திக் கூறினாள்.

தலைவன் வினை முடிந்து வரும் வரை ஆற்றியிருக்க வேண்டும் என்று கூறிய தோழியிடம்,

**ஆதிமந்தி போல பேதுற்று,**
**அலந்தனென் உழல் வென் கொல்லோ**[25]

"அச்சம் பொருந்திய வருத்தத்தால் துயிலைத் துறந்த யான் ஆதிமந்தியைப்போலக் காதலனைக் காணாத சிறுமையினால் யானும் மிக்க வருத்தமுற்றுத் துன்புற்று உழல்வேனோ?" என்று தன்னால் அவன் வரும் வரை ஆற்றியிருக்க இயலாததை வருத்தமுற்றுக் கூறினாள்.

இவ்வாறு தலைவி கூற்றில் அமைந்த பல பாடல்களில் பல சூழ்நிலைகளில் தலைவன் பிரிந்த வழி அவனுடன் சென்ற அவளது நலனைப் பற்றி வருத்தம் மேலிடபலபல சொல்லிப் புலம்பியுள்ளாள் என்று அறியலாம்.

## வழியிடை ஏதம் குறித்து

கற்புக் காலத்தில் தலைவன் பொருள் வயிற் பிரிந்து செல்கின்றான். அவ்வாறு அவன் பிரிந்தவிடத்து அவனை நினைத்தும், அவன் சென்ற வழி நினைத்தும் வருந்தினாள்.

**பாலை நிலப் பாடல் ஒன்றில்,**
**உரு இல் பேஎய் ஊராத் தேரோடு**
**நிலம் படு மின்மினி போலப்பல உடன்**
**இலங்கு பரல் இமைக்கும் என்ப**[26]

உருவற்றதும் ஊர்ந்திடப் பெறாததுமான பேய்த்தேருடன் நிலத்தில் தோன்றும் மின்மினிப் பூச்சியைப் போல எங்கும் விளங்கும் பரற்கற்கள் யாவும் ஒரு சேர ஒளிவிடும் பாழிடங்களைக் கொண்ட கரவழியில் நம் தலைவர் சென்றுள்ளார் என்பதை எண்ணும் போது என்னால் ஆற்றியிருக்க முடியவில்லை என்று ஆற்றுவித்த தோழிக்குக் கூறினாள். நற்றிணைப் பாடல் ஒன்றிலும்,

**...... வெம்பு அலை அருஞ்சுரம்**
**ஏகுவர் என்ப!**[27]

நேற்று என்னுடன் இருந்து அணி செய்தவர் இன்று வெப்பம் மிகுந்த கடத்தற்கரிய பாதையில் தனித்து செல்கின்றார் என்று கூறியதைக் கேட்டு கலங்கினேன் என்று தலைவிகூறுவது வருத்தத்தின் வழி உள்ளது. குறுந்தொகைப் பாடல் ஒன்றில் தலைவி,

**எயினர், பகழி மாய்க்கும்**
**கவலைத்து அவர் தேர் சென்ற ஆறே!**[28]

தலைவன் தேர் ஏறிச் சென்ற வழியானது எயினர், தம் அம்புகளைத் தீட்டுதற்குரிய இடமாகிய, கவர்ந்த வழிகளை உடையது என்பார்கள். அதனைக் குறித்தே யான் வருந்துகின்றேன். பிரிவினை நினைத்து வருந்துவதாக இவ்வூர் அலர் தூற்றுகின்றதே என்று வருத்த மிகுதிக் கண் கூறினாள் என்பது புலப்படுகின்றது.

**நெற்றுவிளை உழிஞ்சில் வற்றல் ஆர்க்கும்**
**மலையுடை, அருஞ்சுரம் என்ப**[29]

வாகையினது நெற்றாம் விளைந்த வற்றல்கள் ஆரவாரிக்கும் மலைகளையுடைய கடத்தற்கரிய பாலை வழி தலைவன் சென்ற வழி. அத்தகைய வழியின் ஏதம் குறித்து நான் வருந்துகின்றேன் என்று கூறியதைக் குறுந்தொகைப் பாடலில் அறியலாம்.

இவ்வாறான பல பாடல்களில் தலைவன் பிரிந்து பொருள் தேடச் செல்வதை உலகநீதி என்று ஆற்றியிருந்தாலும், அவன் சென்ற கானகம் பெரும் ஏதம் நிறைந்தது என்று பலரும் கூறக் கேட்டு அந்த வழிகளை எவ்வாறு கடப்பான் என்று வருந்தியுள்ளாள்.

## குறித்தக் காலத்தில் வராததால்

பாலைக்கலிப் பாடல் ஒன்றில் தலைவன் பொருள் வயிற் பிரிந்து சென்று நீண்ட காலம் ஆகியது. அவன் குறித்த இளவேனிற் பருவமும் வந்தது. இந்த வேளையில்,

**பல் வரி இன வண்டு புதிது உண்ணும் பருவத்து,**

**தொல் கவின் தொலைந்த என் தடமென்**
**தோள் உள்ளுவார்[30]**
**பழைய அழகெல்லாம் தொலைந்துப் போன என் அகன்ற மென்மையான தோள்களையும் அவர் நினைப்பாரோ?**
என்று வருந்தினாள்.

**மற்றுமொரு பாலைக் கலிப் பாடலிலும்,**
**வருந்த, நோய் மிகுமாயின் - நுணங்கிறை!**
**அளி என்னோ?[31]**
**நுதல் ஊரும் பசப்பாயின் - நுணங்கிறை!**
**அளி என்னோ?[32]**
**பாயல் நோய் மிகுமாயின் பைந்தொடி !**
**அளி என்னோ?[33]**

மாலை நோய் வருந்துவதாலும், அயலவர் அலர் தூற்றுவதாலும் காம நோய் வருந்து வதாலும் அவர் அருள்தான் யாதோ? பயன் ஒன்றுமில்லை என்று வருந்தினாள்.

**வேறொரு பாடலிலும்,**
**சேயர் - தோழி!-சேய்நாட் டோரே[34]**

வேறு நாடு சென்றவர் குறித்த பருவம் வராததால் அவர் நம்மை மறந்து சேய்மையானாரோ என்றும் வருந்தினாள்.

**வாராது உரையுநா வரல் நகை**
**வாராது உரையுநர்வரல்நகைஇ[35]**

வருவேன் என்றுக் கூறிச் சென்ற கார்ப் பருவம் வந்தும் வரவில்லையே என்று வருத்தம் மேலிடக் கூறினாள்.

**நிலம் கரி கள்ளிஅம் காடு இறந்தோரே? [36]**

பாலை நிலத்தைக் கடந்து சென்றவரான நம் தலைவர், நினையாரோ? மறந்தாரோ? என்று வருந்தினாள் ஒரு தலைவி.

**அரும்பணி அற்சிரம் வாரா தோரே.[37]**

சொல்லிச் சென்ற பருவம் வந்தும் வராதவர் நம்மை மறந்திருப்பாரோ என்றும் வருந்தினாள் தலைவி.

தலைவன் குறித்துச் சென்ற பருவம் வராததால் தன்னையும் மறந்து பொருளில் நாட்டம் உள்ளவன் ஆனானோ? என்று பலவாறு எண்ணி வருந்தினாள்.

**சந்தேகம் ஏற்பட்டதால் வருத்தம்**
**ஐங்குறுநூறு ......... பாடலிலும்**
**தாக்கணங் காவது எவன் கொல்? அன்னாய்!38**

முன்னர் பலக்கூடி நம்மை கூடியவன் இப்போது நம்மைத் தாக்கி வருத்தும் அணங்கினைப் போல வருந்திக் காட்டுவது தான் எதனாலோ? என்று சந்தேகத்தின் அடிப்படையில் அவன் நடத்தையிலே மாற்றம் புலப்படுவது அவனது போற்றா ஒழுக்கத்தினாலோ என்று தலைவி தோழியிடம் வேதனையுடன் கூறினாள்.

குறித்தக்காலத்தில் வராததாலும், அவனது நடத்தையில் மாற்றம் புலப்படுவது போற்றா ஒழுக்கத்தினாலோ என்ற கூற்றுகளை ஆராயும் போது நடவாத ஒன்றினை அது இந்தன்மையதோ? என்று தனக்குத்தாளே ஏற்பட்ட சந்தேகத்தின் அடிப்படையில் அவளுக்கு வருத்தம் ஏற்பட்டுள்ளது.

**பரத்தை காரணமாக**

பரத்தையிற் காரணமாகப் பிரிந்த தலைவன் அவளையே மணந்துக் கொண்டான் என்பதை யறிந்து வருந்துவதாக மதுரை நக்கீரா பாடல் வரிகள் தெரிவிக்கின்றன.

**நறும் பல் கூந்தற் குறுந்தொடி மடந்தையொடு**
**வதுவை அயர்ந்தனை என்ப[39]**

நறுமணமுடைய கூந்தலையும், குறுகிய வளையல்களையும் உடைய பரத்தையோடு மணஞ்செய்து கொண்டாய் என்று ஊரார் அலர் தூற்றுவர் என்று தலைவி வருத்தமுற்றுக் கூறினாள்''.

**ஐங்குறுநூறுப்பாடல் ஒன்றில்,**
**நீ நேற்று பரத்தையோடு புனலாடினாய்**
**என்று கூறுபவர் ஒருவர் இருவர் அல்லர்பலர்,**
**ஒருவரும் இருவரும் அல்லர்;**
**பலரே தெய்ய; மறையா தீமே.[40]**

என்னிடம் நீ அதனைப் பற்றி மறையாது பொய் சொல்ல வேண்டாம். இனி அவர் பாலே செல்க என்று கூறினாள்.

**ஐங்குறு நூறுப் பாடல் ஒன்றில்,**
**........................ அலரே**
**மறைத்தல் ஒல்லுமோ, மகிழ்ந?**
**புதைத்தல் ஒல்லுமோ, ஞாயிற்ற தொளியே![41]**

நீ பரத்தையோடு புனலாடவில்லை என்ற

பொய்யுரையைக் கூறாதே! நீ புனலாட் டயர்ந்ததை ஊரவர் அறிவர்; யாமும் அறிவோம். ஊர் அலருக்கேனும் பயந்தாவது தலைவன் அவ்வாறு நடந்திருக்க வேண்டாம் என்று கூறுவது அவனது புறத்தொழுக்கத்தோடு. ஊரறிந்த பழிப்பேச்சும் உள்ளத்தை வருத்துவதாகக் கூறினாள் என்பது தெளிவுபடுகின்றது.

**ஐங்குறுநூற்றில்,**

**பேணா ளோ நின் பெண்டே**

**யான் தன் அடக்கவும், தான் அடங்கலளே![42]**

நினது போற்றா ஒழுக்கம் கண்டு என் வேதனையை அடக்கிக் கொண்டிருப்பவும். பரத்தையானவள் தான் அடக்கமில்லாது நடக்கின்றாளே! அத்தகைய அடக்கமில்லாதவளை நச்சிச் செல்லும் நீதான் தகைமை இல்லாதவன் என்று வருத்தத்துடன் கூறினான்.

**மற்றுமொரு ஐங்குறுநூற்றுப் பாடலில்,**

**ஆற்றுக தில்ல, யாமே;**

**தோற்க தில்ல, என் தடமென் தோளே![43]**

என்ற வரிகளில், எம் பெருமையும் மென்மையும் கொண்ட தோள்களோ, தாம் அப்பிரிவை ஆற்றவியலாதவாய்த் தோற்றுத் தாம் மெலிவதாயின், அவை அவ்வாறே மெலிவதாகுகஎன்று தலைவன் பரத்தைமை கொண்டதை எண்ணி வருந்தினாள் என்பது புலப்படுகின்றது.

மருதக் கலிப் பாடல் ஒன்றில் பாணன் ஒருவன் எனது இல்லத்தையும் பரத்தையர் இல்லம் எனக் கருதி,

**"பொலிக" எனப் புகுந்த நின் புலையனைக் கண்ட யாம்" ?[44]**

"பொலிக, பொலிக" என வாழ்த்துவதைக் கேட்ட நான் மிகவும் வேதனையடைந்தேன் எனக் கூறினாள்.

பரத்தைமை சென்ற தலைவனை எண்ணி வருத்தமுடையவளிடம் பரத்தையும் பாணனும் செய்த செயல்களாலும் மேலும் வேதனையடைந்துள்ளாள். தனக்கு அடிப்படைத் தேவையான தலைவன் பரத்தைமையால் கிடைக்காமல் தடைப்படும் போது வருத்தம் என்ற மனவெழுச்சி உருவாகிச் செயல்பட்டுள்ளது என்று தெளிவாகிறது.

### மகனிடம் வருத்தப்படல்

தந்தை, பரத்தையர் வீடு சென்று என்னுள்ளத்தை வருத்துவது போதாதென்று நீயும் பரத்தை வீடு சென்று வந்தாயோ, அது வெந்த புண்ணில் வேலை எறிவது போல இருக்கின்றது என்று கூறினாள் என்பதை,

**வெந்த புண் வேல் எறிந்தற்றால், வடுவொடு**

**தந்தையும் வந்து நிலை"[45]**

என்ற மருதக்கலிப் பாடல் வரிகள் உணர்த்தும் மற்றொரு பாடலில் பரத்தையர் தந்தகையுறைப் பொருள்களை எடுத்து வந்த மகனிடம் கோபமாகப் பேசினாள் தலைவி.

அதனைக் கண்டு பயந்த மகனிடம் தனது வருத்தத்தை,

**அஞ்சாதி; நீயும் தவறில்லை; நின் கைஇது தந்த**

**பூஎழில்உண்கணவளும்தவறிலள்;----------------**

**யானே தவறுடையேன்[46]**

அஞ்சிநடுங்கி நின்ற மகனைக் கண்டு அவனுக்கு ஆறுதல் கூறுவாள் போல் நீயும் தன் உனக்குப் பரிசளித்த அவளும் தவறில்லாதவள். யானே தவறுடையவள்என்று தனது வருத்தத்தைக் கூறினான்.

**வளை நெகிழ்பு யாம் காணுங்கால்[47]**

**எவ்வநோய் யாம் காணுங்கால்[48]**

**அல்குல் வரி யாம் காணுங்கால்[49]**

உனது தந்தையால் கைவிடப்பட்டவளை நெகிழ்பு கொண்ட மகளிரைக் காணும் போதும், உன் தந்தைக்காக நலம் சாய்ந்து இப்போது அவர்கள் படும் துன்பம் காணும் போதும், உனது தந்தையால் கைவிடப் பட்டவரான மகளிரது அல்குல் வரியினை யாம் காணும் போது வருத்தம் தருவதாக உள்ளது எனக் கூறினாள் என்பதை மருதக்கலி பாடல்கள் மூலம் அறியலாம். மகன் செய்த செயல்களையும், தலைவன் செய்த கொடுமைகளையும் மகனிடம் வருத்தத்துடன் கூறினாள்.

### குலப்பெருமையை எண்ணி

குறுந்தொகைப் பாடல் ஒன்றில் தலைவனைத் தேடி பரத்தையர் ஆடும் இடங்களெல்லாம்

சென்றும் அவனைக் காணவில்லை. ஆடுகளம் ஒவ்வொன்றிற்கும் எனது குலப்பெருமையை மறந்து நான் சென்றேன்.

**யானும் ஓர் ஆடுகள மகளே[50]**

அவ்வாறு நான் சென்றதால் நானும் ஒரு ஆடுகள் மகளே ஆனேன் என்று வருத்தமுடன் கூறினாள். இவ்வாறு அவள் கூறியதிலிருந்து தனது குலப்பெருமையையும் மறந்து ஆடுகளம் தோறும் அவனைக் காணச் சென்றதால் தன்னையும் ஆடுகள மகளிர் என்று எண்ணுவார்களோ என்று வருந்தியுள்ளாள்.

**மனம் தலைவனை வெறுக்காததால்**

**ஐங்குறுநூற்றில்**

**......................... ஆம்பல்**

**தாதேர் வண்ணம் கொண்டன**

**ஏதிலா ளர்க்குப் பசந்த, என் கண்ணே![51]**

அன்பற்றவனாக ஒழுகும் தலைவனால் பசப்பற்ற எனது கண்கள் ஆம்பற் பூவின்தாது போல் நிறத்தைக் கொண்டனவே! அது தான் ஏனோ? நம்மை மறந்தானை மறக்க மாட்டாதே நாம் ஏங்கிச் சோரும் நிலையான இது தான் என்னையோ? என்று வருத்தத்துடன் கூறினாள்.

இவ்வாறு தலைவி தனது வருத்தத்தை வெளிப்படையாகவே பல இடங்களில் தெரிவிக்கின்றாள். தலைவியின் மனதிற்கு இன்பமும் மகிழ்ச்சியும் அளிக்கவல்ல செயல்களை ஏற்கத்துடிப்பதும், அச்சத்தையும் வருத்தத்தையும் அளிக்கக் கூடியனவற்றை ஒதுக்கித் தள்ளுவதும் அவளிடம் இயல்பாக அமைந்தன. மனித வாழ்க்கைக்குச் சுவையூட்டுபவை இம்மனவெழுச்சி களேயாம். இல்லற வாழ்வில் இன்பத் துன்பங்கள் ஓரளவேனும் கலந்து இடம் பெறவில்லையெனில் சலிப்பைத் தருவதாக அமைந்து விடும்.

நாம் செல்வத்தை இழக்கிறோம், வருத்தம் அடைகிறோம், அழுகிறோம் என்று பாமர மக்கள் எண்ணுகின்றனர். உண்மையில் நாம் அழுவதனால் தான் வருத்தமடைகிறோம் 52 என்று உளவியலார் கூறுகின்றனர். அது போலத் தலைவன் சென்ற வழியின் ஏதம் குறித்தும், அவனை நினைத்துக் கொண்டும் இருப்பதனால் ஏற்படும் அழுகையால் தான் தலைவி தான் வருத்தமடைந்துள்ளாள்.

*1. குறு., பா.97:வ.14*
*2. அகம்., பா.82:வ.16-18*
*3. அகம்.., பா.8.வ.4-5*
*4. குறு., பா.25:வ.1-2*
*5. ஐங்குறு., பா.22:வ.3-4*
*6. குறு- பா.35:வ.1*
*7. குறு., பா.38:வ.4-6*
*8. பாலைக் கலி.,பா.33:வ.11*
*9. மேலது., பா.33:வ.15*
*10. பாலைக் கலி., பா.32:வ.24*
*11. பாலைக் கலி., பா.23:வ.15-17*
*12. ஐங்குறு,, பா.19:வ.4-5*
*13. குறு., பா.13:வ.5*
*14. நற்றிணை. பா31:வ.10-12*
*15. குறு, பா.54:வ.5*
*16. குறு., பா.57:வ.5-6*
*17. குறு., பா.79:வ.8*
*18. குறு., பா.77.56*
*19.குறு.பா.41:வ,3-5*
*20.குறு. பா.43.வ.5*
*21.குறு., பா.20:வ.5-6*
*22.குறு., பா:24:வ.4-5*
*23. குறு. பா.28, வ.4-6*
*24.அகம்,,பா,40:வ.16-17*
*25. அகம்.பா.45:வ.12-15*
*26. அகம்.பா.,.67:வ.15-19*
*27. நற்றிணை. பா84:வ.9-10*
*28. குறு. பா. 12:வ.3-4*
*29. குறு., பா.39:வ.2.3*
*30.பாலைக்கலி, பா.25:வ.9.10*
*31.பாலைக்கலி., பா. 27:வ.1*
*32. மேலது., பா.27:வ.15*
*33. மேலது., பா.27:வ.19*
*34. குறு., பா.64:வ.5*
*35. குறு பா.65:வ.பா3*
*36. குறு. பா.67:வ.5*
*37. குறு., பா.82:வ.6*
*38. ஐங்குறு.. பா.23:வ.4*

*39. அகம்., பா.36:வ.11-12*
*40. ஐங்குறு., பா.64:வ.3-4*
*41.ஐங்குறு,,பா.71:வ.3-5*
*42. ஐங்குறு., பா.68:வ.3-4*
*43.ஐங்குறு., பா.12:வ.3-4*
*44.மருதக்கலி, பா.3:வ.19*
*45.மருதக்கலி, பா.18:வ.36-37*
*46.மருதக்கலி., பா.19:வ.36-37,40*
*47.மருதக்கலி., பா.15:வ.13*
*48. மேலது.பா.15:வ.17*
*49. மேலது,பா.15:வ:21*
*50.குறு.,பா.31:வ.4*
*51. ஐங்குறு.பா.34:வ.2-4*
*52.கி.நாகராஜன், கல்வி உளவியல். ப.73*